1981 பிப்ரவரி 5]

திரு. எஸ். அரங்கநாதன் : தலைவர் அவர்களே, பேருந்து நிலையத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்கள், அதிலே ஒரு பகுதி மாத்திரம் ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது, அது ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே ஆரம்பிக்கப்படும், சீக்கிரம் முடிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபையின் முன் அனுமதியோடு கேள்விநேரம் நீட்டிக்கப்படுகிறது.

லோயர் கேம்ப்—குமுளி மலைச்சாலை.

*வினா எண் 196—திரு. ஆர். டி. கோபாலன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

லோயர் கேம்பிலிருந்து குமுளி வரை உள்ள மலைப் பாதையை அகலப்படுத்தி சாலையை புதிதாகப் போடவும் தடுப்புச்சுவர் கட்டவும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : லோயர் கேம்பிலிருந்து குமுளி வரை உள்ள மலைப் பாதையை அகலப்படுத்தி சாலையை புதிதாகப் போடவும் தடுப்புச் சுவர் போடவும் திட்டம் அரசிடம் இல்லை. ஆனால், குறிப்பிட்டுள்ள மலைச்சாலையில் கி. மீ. 74/6-ல் பழுதடைந்திருந்த தடுப்புச்சுவரை ரூ. 52,000 செலவில் பராமரிப்பு நிதியிலிருந்து பழுதுபார்க்கும் வேலை எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள்முடியும் தறுவாயில் உள்ளன.

திரு. ஆர். டி. கோபாலன் : பேரவைத் தலைவரவர்களே, லோயர் கேம்பிலிருந்து குமுளி வரை செல்லும் பாதை மிகவும் முக்கியமான பாதை. அங்கே சுற்றுலாப் பயணிகள் அடிக்கடி வந்த வண்ணம் இருக்கின்றனர். அந்தச் சாலை மிகவும் மோசமாக இருப்பதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு பல உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. தமிழகத்திலுள்ள அத்தனை மலைச் சாலைகளும் நல்லமுறையில் இருக்கின்றபொழுது இந்த மலைச்சாலை மட்டும் மோசமான நிலையில் இருப்பதை உணர்ந்து மற்ற மலைச் சாலைகளைப் போன்று இதையும் பராமரிப்பதற்கு அரசு முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மலைப் பகுதி முழுவதையும் போட தற்போது ஆரம்பிக்கும் திட்டம் இல்லை. ஆனால் நான் ஏற்கனவே சொன்னதைப் போல கிலோ மீட்டர் 74/6-இல் பழுது அடைந்திருந்த தடுப்புச் சுவரை பழுது பார்க்க 52,000 ரூபாய் ஏற்கனவே ஒதுக்கப் பட்டு வேலைகள் துவங்கப்பட்டிருக்கின்றன.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தேக்கடி சுற்றுலா இடமாக அமைக்கப் பட்டிருக்கிறது. அங்கே இரவிலே செல்லுகின்ற வாகனங்கள் மஞ்சு மூட்டத்தினால் பாதை சரியாக இல்லாத காரணத்தால் சாலை விபத்துக்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பாக இருக்கிறது. ஆகவே, இரவு 12 மணியிலிருந்து விடியற்காலை 6 மணி வரையில் அந்தச் சாலையிலே பஸ் மற்றும் கார் போன்ற வாகனங்கள் போவதற்குத் தடை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

இடைப்பாடி நகரில் போக்குவரத்துக் கழகப் பணிமனை.

*வினா எண் 38—திரு இ. கணேசன் : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் இடைப்பாடி நகரில் அண்ணா போக்குவரத்துக் கழக ''பணிமனை'' ஒன்று கட்ட அனுமதி கேட்டு அரசுக்குச் செயற்குறிப்பு வந்துள்ளது ?

(ஆ) ஆம் எனில் எத்தனை ரூபாய் செலவில் செய்ய திட்ட வரைவுவந்துள்ளது ?

(இ) அந்த விண்ணப்பத்தின் மீது அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது ?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) பணிமனை சுமார் ஆறு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட இருக்கிறது.

(இ) பணிமனைக்கான நிலத்தைக் கையகப்படுத்தும் பணி நடந்து வருகின்றது. நிலம் கையகப்படுத்தப்பட்டு நிலத்தை சம்பந்தப்பட்ட வருவாய்த்துறை அதிகாரிகள் அண்ணா போக்கு வரத்துக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டபின், கட்டிட வேலைகள் மேற்கொள்ளப்படும்.